ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/56 - 2018 ඔක්තෝබර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.04

2091/56 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல.: 3J/91/UDA/184.
எனது இல.: BD/BD/LND/3/5/1/i.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், ரில்பொல கோரளை சிறு பிரிவில், பதுளை கிழக்கு (78B) கிராம அலுவலர் பிரிவில், கெந்தலகம பிரிவு இல. 10 - மத்திய பதுளை (பதுளை மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவைகள் நாயகத்திற்கு பதிலாக பதுளை மாவட்ட சிரேஷ்ட நில அளவைகள் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் ப. 508 மற்றும் 1999.10.27 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடம் மற்றும் 2018.08.24 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் ப. 508 இற்குரிய காணி விபரப்பட்டியலுக்கு அமைய 0.0119 ஹெக்டயார் அளவிலான கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் மற்றும் எல்லைகள் அடங்கிய உப அட்டவணை - 01

**துண்டு இல. 4**

காணியின் பெயர்: பண்டிதகெதரவத்த மற்றும் ரதலவத்த, துண்டு இலக்கம் 3A, தபால் நிலைய வீதி; விபரம்: வீதி (ஒரு பகுதி); உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: மு.வ.ப 508 இன் 04 ஆவது காணித் துண்டு. எல்லைகள் சரி பிழை பார்க்கப்பட்டது. கையகப்படுத்தல் சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்டது. ஆரம்ப உரிமை கோருபவர்: தெஹிவளை, களுபோவில, பீரிஸ் மாவத்தை, இல. 17 இல் வசிக்கும் லிலியன் பீரிஸ். கையகப்படுத்தல் செயற்பாட்டினை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.0119 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மு.ப. 10.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என்.எம். ஞானவதி,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2018, ஒற்றோபர் 01.

10 - 990

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.